இன்னிசை மஞ்சரி

[...]ICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS
13 MAR 1930

By

V. ராஜகோபாலய்யர்.

ஹெட்மாஸ்டர், நாஷனல் எலிமெண்டரி ஸ்கூல்,

மன்னார்குடி.

PUBLISHED BY

D. MANICKAM PILLAI,

Dwaraka Publishing House,

MANNARGUDI.

1929

[Price As. 4.

NR.
N29
148828

13 MAR 1930
MADRAS

FOREWORD

M. R. Ry. BY

T. V. Sundaramayyar Avl., B.A., L.T.,

Deputy Inspector of Schools.

MANNARGUDI.

இன்னிசை மஞ்சரி என்ற நூல் எனது பார்வைக்கு வந்தது. அதை எழுதியவரான ஸ்ரீமான் V. ராஜகோபாலய்யர் இசைநூல் வல்லவர் என்றும், சிறுவர்களுக்கேற்ற போதகாசிரியர் என்றும், பலர் அறிந்திருக்கலாம். அவர் இந்நூலுக்கு என்னை முன்னுரை எழுதித்தரும்படி கேட்ட போது, இசைநுட்பம் அறியாத நான் எவ்விதம் இசைவதெனத் தயங்கினேன். ஆயினும் இந்நூல் ஆரம்ப பாடசாலைக்கேற்ற விதமாய், முன் தஞ்சை ஜில்லா கல்வியதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட பாட திட்டத்திலிருந்தே தொகுக்கப்பட்டிருக்கிறதென அறிந்து, இம்முன்னுரையை எழுதத் துணிந்தேன்.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழில் இசை நடுநாயகமாய் விளங்குவதிலிருந்தே, இயல் நாடகம் இவ்விரண்டிற்கும் இசை இன்றியமையாததென நினைக்கலாகும். இந்த இசையை இளம்பருவத்திலிருந்தே பயின்றால் நலமாகும். முதலில் பொருளோடு கூடிய இசையே மனதிற் பதியும். ஸ்தோத்திரப் பாடங்கள், செய்யுள் பாடம், வசன பாடம், கீர்த்தனைகள் என இந்நூல் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலில் இசைப்பாடம் அதிகமாயிருப்பதுடன் மனப்பாடம் செய்யத் தகுதியான சில வசன பாடங்களும். பதவுரையுடன் செய்யுள் பாடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இப்புஸ்தகம் எல்லா ஆரம்ப பாடசாலைகளிலும் 5 அல்லது 6-வது வகுப்புகளுக்கு ஒரு உப பாடமாக இருக்கல் தகுதி என நான் அபிப்பிராயப்படுகிறேன்.

மன்னார்குடி,
3—10—29.

இங்ஙனம்,
(Sd.) T. V. SUNDARAMAYYAR.

OPINION

BY

M. R. Ry.

S. Vaidyanathayyar Avl, B.A., L.T

Headmaster,

NATIONAL HIGH SCHOOL,

MANNARGUDI.

Mr. V. Rajagopalaiyar is a musician himself and has been teaching music to children for a number of years. He is therefore well qualified for the work he has undertaken and the selections made are, I believe, easy and suited for use in the lower classes of schools. It is hoped that all schools will take advantage of the publication and that the author would follow up the work he has begun with suitable selections for use in the higher classes also.

N. H. S.
Mannargudi,
7—11—29.

(Sd.) **S. Vaidyanathan,**

Headmaster.

13 MAR 1930

முகவுரை.

தஞ்சை ஜில்லா கல்வியறிவாளர்களால் விரிவான பாடத்திட்டம் தயாரித்திருந்ததை ஆதாரமாகக் கொண்டு இந்நூலைத் தொகுத்திருக்கிறேன். இந்நூலில் காணப்படும் இசைத் தமிழுக்கு சுரதாளங்கள் குறித்திருக்கிறேன். அவற்றின் உதவியைக் கொண்டு தாமே பாக்களின் வர்ணமெட்டுகளைக்கண்டு பிடித்து சுலபமாகப் பாடக்கற்றுக் கொள்ளலாம். இசையோடு பாக்களை மனனம் செய்தால் எளிதில் மனதிற் பதியுமாதலாலும், பசுமரத்தாணிபோல் நீண்டகாலம் மறக்காமல் மனத்தில் தங்குமாதலாலும், எல்லா பாடசாலைகளிலும், பிள்ளைகள் கற்று பயனடைவார்களென்ற ஆசையால் இப்புத்தகத்தை அச்சிட முயன்றேன்.

என் முயற்சியை முற்றுப்பெறச் செய்து இதை அச்சிட்டு பிரசுரம் செய்ய முன்வந்த துவாரகா பப்ளிஷிங் ஹௌஸ் ப்ரொப்ரைடராகிய ஸ்ரீமான் D. மாணிக்கம் பிள்ளை அவர்களுக்கு நான் நன்றி பாராட்டக் கடமை பட்டிருக்கிறேன்.

என் கையெழுத்துப் பிரதியைத் திருத்தி, திருக்குறள், நாலடியார், பழமொழி, நளவெண்பா முதலான செய்யுள்களுக்கு அருத்தமெழுதித் தந்த தமிழ் பண்டிதர் ஸ்ரீமான் இராஜகோபால முதலியார் அவர்களுக்கு என் அன்பார்ந்த வந்தனத்தை யளிக்கிறேன்.

மன்னார்குடி,
22—9—29.

V. ராஜகோபாலய்யர்.

பொருளடக்கம்.

I.		பக்கம்.
1.	விநாயகர் ஸ்தோத்திரம்	1
2.	சரஸ்வதி ஸ்தோத்திரம்	2
3.	சுப்பிரமணியர்	2
4.	திருப்புகழ்	3
5.	தேவாரம்	4
6.	திருவிசைப்பா	4
7.	கம்பராமாயணம்	5
8.	தேம்பாவணி	5
9.	தாயுமானவர்	6
10.	திருவருட்பா	8
11.	தாயுமானவர் (பராபரக் கண்ணிகள்) ...	9
12.	நாவுக்கரையர்	9
13.	தேவாரம்	10
14.	நாமாவளி	11
15.	தேசாபிமானப் பாடல்கள்	11
16.	ஆனந்தக் களிப்பு	12

II. செய்யுட்பாடம்.

(1)	குறள்	13
(2)	நாலடியார்	17
(3)	பழமொழி	21

(4) நளவெண்பா 23
(5) தனிப்பாடல்கள் 31
(6) இராமச்சந்திர கவிராயர் 31
(7) காளமேகப் புலவர் 32
(8) ஔவை 32
(9) சிவப்பிரகாச சுவாமிகள் 33

III. வசனப் பாடம்.

(1) வீதி விடங்கன் சரித்திரம் 34
(2) கடன் படல் 35
(3) தேச ஸஞ்சாரம் 35

IV. கீர்த்தனைகள்.

(1) நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள் ... 37
(2) வேதநாயகம் பிள்ளை கீர்த்தனைகள் ... 40
(3) இராம நாடகக் கீர்த்தனை 42

V. வியாசம் 46

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
2	11	ர[1]	ரி[1]
11	22	பிபமா	பிமா
34	2	விடங்கள்	விடங்கன்

ஸ்ரீராமஜெயம்.

கடவுள் வணக்கம்.

—••※••—

விநாயகர் ஸ்தோத்திரம்.

'பாராயோ என்னைமுகம்' என்ற மெட்டு.

ஆரபி—ஏகதாளம்.

சீதக்களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசைபாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வண்ணமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்
வேழமுகமும் விளங்குசிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குசபாசமும்
நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்
நான்றவாயும் நாலிருபுயமும்
மூன்றுகண்ணும் மும்மதச்சுவடும்
இரண்டுசெவியும் இலங்குபொன்முடியும்
திரண்டமுப்புரிநூல் திகழொளிமார்பும்
அற்புதநின்ற கற்பகக்களிறே!

* * * *

தத்துவநிலையைத் தந்தெனையாண்ட
வித்தகவிநாயக! விரைகழல்சரணே.

2. சரஸ்வதி ஸ்தோத்திரம்.

'பாராயோ என்னைமுகம்' என்ற மெட்டு.

ஆரபி—ஏகதாளம்.

தாவறுமுலகெலாந் தந்தநான்முகத்
தேவுதன்றுணைவியாய்ச் செறிந்தபல்லுயிர்
நாவுதோறிருந்தருள் நலங்கொள்வாணிதன்
பூவடிமுடிமிசைப் புனைந்துபோற்றுவாம்.

---

3. சுப்பிரமணியர்.

திருப்புகழ்.

செஞ்சுருட்டி—ஜம்பை தாளம்.

(ர^1, க^2, ம^1, த^2, நி^{1})

பப்பபப	பாபபப	மபதபம	கரிக்ஸஸ
கருவினுரு	வாகிவந்து	வயதளவி	லேவளர்ந்து
ரிபமகக	ரீகஸஸ	ஸநிதபத	ஸாஸஸஸ
கலைகள்பல	வேதெரிந்து	மதனூ	லே.
கரியகுழல்	மாதர்தங்கள்	அடிசுவடு	மார்புதைந்து
கவலைபெரி	தாகிநொந்து	மிகவா	வாடி
அரகரசி	வாயவென்று	தினமுநினை	யாமல்நின்று
அறுசமய	நீதியொன்றும்	அறியா	ம
அசனமிடு	வார்கள்தங்கள்	மனைகள்தலை	வாசல்நின்று
அனுதினமும்	நாணமின்றி	அலைவே	னோ?

ஊரகபட மேல்வளர்ந்த பெரியபெருமாள் அரங்கர்
உலகளவும் மால்மகிழ்ந்த மருகோ னே!
உபயகுல தீபவங்க விருதுகவி ராஜசிங்கம்
உறைப்புகலி யூரிலன்று வருவோ னே!
பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனரு ளால்வளர்ந்த குமரோ னே!
பகையசுரர் சேனைகொன்று அமரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதில்நின்ற பெருமா ளே!

---

4. திருப்புகழ்.

கமாஸ்—ஏகதாளம்.

(ரி^{2}, க^{2}, ம^{1}, த^{2}, நி^{1})

மா,மமமகம பா,பபபமப தா,தததநித பமநிதபா,,
பாதிமதிநதி போதுமணிசடை நாதனருளிய குமரேசா!
மா,மமமமப கா,ரிஸஸஸஸ ரீ,ரிரிகமம கமகரிஸா,,
வாகுகனிமொழி மாதுகுறமகள் பாதம்வருடிய மணவாளா!
காதுமொருவிழி காகமுறவருள் மாயனதுதிரு மருகோனே!
காலனெனையணு காமலுனதிரு காலில்வழிபட அருள்வாயே
ஆதியயனொடு தேவர்சுரருல காளும்வகைதரு சிறைமீளா
ஆடுமயிலினில் ஏறியமரர்கள் சூழவலம்வரும் இளையோனே!
சூதமிகவளர் சோலைமருவுசு வாமிமலைதனில் உறைவோனே!
சூரனுடலற வாரிசுவறிட வேலைவிடவல பெருமாளே!

---

5. தேவாரம்.

உசேனி—ரூபகம்.

(ரி², க¹, ம¹, த¹, நி¹)

பபபாதப	மபமா கரி
மற்றுப்பற்றெனக்	கின்றிநின்றிருப்
மபமா கரி	ஸரிரீ,,
பாதமே மனம்	பாவித்தேன்
ரிமக2ரிஸரி	ரிமக²ரிஸரி
பெற்றலும் பிறந்	தேனினிப்பிற
பபமககரி	ஸஸஸா,,
வாதன்மைவந்	தெய்தினேன்;
கற்றவர்தொழு	தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக்கொ	டுமுடி
நற்றவா! உனை	நான்மறக்கினும்
சொல்லும்நாநமச்சி	வாயவே.

---

6. திருவிசைப்பா.

'மார்கழி மாதம்' என்றமெட்டு.

எதுகுலகாம்போதி—ஏகதாளம்

(ரி², க², ம¹, த², நி¹)

தாஸரி காகக	காகக காமக
கற்றவர் விழுங்கும்	கற்பகக்கனியை
ரிபகம ரிஸஸா	ஸரிகரிரீ,,
கரையிலாக்கருணை	மாக்கடலை

பாபப பபபா	தஸதபமகரீ
மற்றவரறியா	மாணிக்கமலேயை
ஸஸஸஸரிபமக	ரிஸஸா,,,,
மதிப்பவர்மனமணி	விளக்கை
செற்றவர்புரங்கள்	செற்றஎம்சிவனைத்
திருவிழிமிழலைவீற்	றிருக்கும்
கொற்றவன்றன்னைக்	கண்டுகண்டுள்ளம்
குளிரஎன்கண்குளிர்ந்	தனவே.

7. கம்பராமாயணம்.

சங்கராபரணம் (ஆலாபனம்)

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைநிறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலாவிளை யாட்டுடை யார் அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரணுங்களே.

(வெண்பா பாடுவதைப்போல் பாடவேண்டும்)

8 தேம்பாவாணி.

நாதநாமக்கிரியை (ஆலாபனம்)

(ரி1, க2, ம1, த1, நி2)

ததாததா தாதா	பபாபபா பாபா
அறக்கடல்நீயே	அருட்கடல்நீயே

மமா மம மாமமா	காகா
அருங்கருணாகரன்	நீயே
திறக்கடல் நீயே	திருக்கடல் நீயே
திருந்துளம் ஒளிபட	ஞான
ஸரீ ககா மாமா	கமா பபா பபபா
நிறக்கடல் நீயே	நிகர்கடந்துலகில்
பதபாமா பதபாமா	கமபா
நிலையும்நீ உயிரும்நீ	நிலைநான்
பதாநிஸா ஸாஸா	தநிஸாஸ்ா ரிஸாநி
பெறக்கடல் நீயே	தாயும்நீ எனக்கு
தநீதாபா ததாபா	மகரீஸா
பிதாவும்நீ அனைத்தும்	நீயன்றோ? (ஆலாபனம்)

9. தாயுமானவர்.

தோடி (ஆலாபனம்)

(ரி^{1}, க^{1}, ம^{1}, த$_{1}$, நி$_{1}$)

தாநீ ஸஸா ரிஸஸ	தநிஸா ஸஸாரிஸா
அங்கிங் கெனாதபடி	எங்கும் ப்ரகாசமாய்
தநிஸாரி	ஸாநிதாத
ஆனந்த	பூர்த்தியாகி
நிதபம பதாநிஸஸா	ஸகரிஸா ஸஸரிஸா
அருளொடு நிறைந்ததெது;	தன்னருள்வெளிக்குளே
தநிஸாரி	ஸாநிதாதா
அகிலாண்ட	கோடிஎல்லாம்

நீதாபபாமாமா
தங்கும்படிக்கிச்சை
காமபபா
தழைத்ததெது

காமபா தபபா
வைத்துயிர்க்குயிராய்த்
தநிஸாரிஸா
மனவாக்கினில்

தாபாமபதநிஸஸா
தட்டாமல் நின்றதெது;
நீதாபா
தங்தெய்வம்

பதநிதாததபபா
சமயகோடிகளெலாம்
நீதாப பாப
எங்தெய்வமென்(று)

மாபா கமா பபா
எங்குந்தொடர்ந்தெதிர்
நீநிநீ
எங்கணும்

மபாமகம நீதபபா
வழக்கிடவு நின்றதெது ;
பதநிநீநீ
பெருவழக்காய்

தநிதபா மாமமம
யாதினும் வல்லஒரு
தாநீஸா
என்றைக்கும்

காமாப பாபபா
சித்தாகி இன்பமாய்
ரீஸஸஸா ஸா
உள்ளதெது; மேல்

ஸாஸா நிஸநிதமாமா
கங்குல் பகலறநின்ற
நிதாபாமகாம
கருத்துக்கிசைந்த

தாநிஸரிஸஸா ரிஸ
எல்லையுளதெது; அது
தநிஸா
ததுவே;

தாததததா பாப
கண்டனவெலாமோன
தநிதபாதம
[illegible]ருதியிஞ்சலி

பப பபபபாதபா
வுருவெளியதாகவும்
பதநிஸா
செய்குவாம். (ஆலாபனம்)

10. திருவருட்பா.

ஆனந்த பைரவி—(ஆலாபனம்)

(ரி^{2}, க^{1}, ம^{1}, த^{2}, நி^{1},)

கமாபபபா பபபபாப கமாபாபா பா
தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாய்க்கூட்டி

பாஸநிதா பாபாமா கமபமமா கரீஸா
சர்க்கரையும் கற்கண்டும் பொடியுமிகக்கலந்தே

நிஸா மகரீகமா பாப மபாஸாஸா நிதபபா
தனித்த நறுந்தேன்பெய்து பசும்பாலும்தெங்கின்

கமாபாபா பாநிபம மபாமகாகரிஸா ஸஸஸ
தனிப்பாலும் சேர்த்தொரு தீம்பருப்பிடியும்விரவி

நிஸாமகரி கமாபபாமா மபாஸ்ாஸ ஸஸ்ாஸ்ா
இனித்தநறு நெய்யளைந்தே இளஞ்சூட்டில் இறக்கி

ஸக்ாரிஸஸ்ா ஸ்ாஸஸஸ்ா நிஸ்ாரிஸநீதபாப
எடுத்தசுவைக் கட்டியிலும் இனித்திடுதெள்ளமுதே!

மபாஸநிதா பபாபபபா கமாபாமகாகரிசா
அநித்தமறத் திருப்பொதுவில்விளங்கும் நடத்தரசே!

கமபமாகரி ஸாஸஸஸா ஸகாரிஸஸாகமபா
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கலணிந்தருளே.

(ஆலாபனம்

11. தாயுமானர்.

பராபரக் கண்ணிகள்

ஆரபி—ஏகதாளம்

ஆராவமுதே! அரசே! ஆநந்தவெள்ளப்
போரேறே! மோனப் பெருக்கே! பராபரமே!
சிந்தித்த வெல்லாமென் சிந்தையறிந் தேயுதவ
வந்தகருணை மழையே! பராபரமே!
அன்பை பெருக்கி யெனதாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே! இறையே! பராபரமே!
எண்ணாத வெண்ணமெலாம் எண்ணியெண்ணி யேழை
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே! [நெஞ்சம்
பாராயோ் என்னைமுகம் பார்த்தொருகா லென்கவலை
தீராயோவாய்திறந்து செப்பாய் பராபரமே!

12· நாவுக்கரையர்.

கமாஸ் (ஆலாபனம்)

தததா தாபதநிதா நீதா தஸநித
திருவே, என்செல்வமே, தேனே, வானோர்

பபாபபா கமாபாப பாபப மபத
செழுஞ்சுடரே, செழுஞ்சுடர் நற்சோதி, மிக்க

பபா தாததத பதநிததா நீதா
உருவே, என்னுறவே, என்ஊனே, ஊனின்

பாமமா காமாப பாபா பாப
உள்ளமே, உள்ளத்தின் உள்ளே நின்ற

மமமா மாகாமபபா மபதா நீதா
கருவே, என்கற்பகமே, கண்ணே, கண்ணிற்

பதநிநிநீ தநிஸாஸஸாஸா தநிஸர
கருமணியே. மணியாடுபாவாய், காவாய்

தநிஸாநி தாததாதா நிஸநிதபாபா
அருவாய வல்வினைநோய் அடையாவண்ணம்

நீதபமாமம மகரீ கமபபாபா
ஆவடுதண்துறை உறையும் அமரரேறே

---

13. தேவாரம்.

கானடா—ஆதி

(ரி2, க1, ம1, த2, நி1)

1\. ,மபநி ஸாஸஸா நிஸரிஸநிஸநிப
சொற்றுணை வேதியன் சோதிவானவன்

,பபப தநிபம ஸதநிபகமரிஸ
பொற்றுணை திருந்தடி பொருந்தக்கைதொழக்

2\. கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.
பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை
யாவினுக்கருங்கலம் ரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங் கோட்டமில்லது
நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே

14. நாமாவளி.

குறிஞ்சி—ஏகதாளம்

(ரி2, க2, ம1, த2, நி2)

மபமககாகா　　　　மபமகரீ , ,
அம்பலத்தரசே　　　அருமருந்தே
ஸாஸஸஸாரீ　　　　கமகரிஸா , ,
ஆனந்தத்தேனே　　　யருள் விருந்தே;

பொதுநடத்தரசே புண்ணியனே
புலவரெலாம்புகழ் கண்ணியனே
சிவசிவசிவசிவ சின்மயதேஜா
சிவசுந்தர குஞ்சித நடராஜா
மலைதருமகளே மடமயிலே
மதிமுகவமுதே யிளங்குயிலே
ஆனந்தக்கொடியே யிளம்பிடியே
யற்புதத்தேனே மலைமானே
அந்தணவங்கண வம்பரபோகா
அம்பலநம்பர வம்பிகைபாகா
அம்பரவிம்ப சிதம்பரநாதா
அஞ்சிதாஞ்சித குஞ்சிதபாதா
தந்திரமந்திர யந்திரபாதா
சங்கர சங்கர சங்கர நாதா.

---

15. தேசாபிமானப் பாடல்கள்,

கும்மி மெட்டு

1. ஓங்கும் இமாசலம் ஒளிர்முடியாம்; எங்கும்
உலவு பலநதி மாலைகளாம்;

தாங்கும் இக்கோலம் தழைக்கும் இந்தியத்
தாயே! உனக்கு நமஸ்காரம்.

2. கண்டங்களெங்கும் காணும்நற்காட்சிகள்
கலந்து தன்னுள்ளே காட்டுதலால்
அண்டமெங்கும் இல்லா அருமை இந்திய
அன்னை! உனக்கு நமஸ்காரம்.

3. நீர்வளமும் காட்டின் நீள்வளமும் மலை
நேர்வளமும் நகர்சாரும் சிறப்பச்
சீர்வளமும் மிகத்திகழும் இந்தியச்
செல்வி! உனக்கு நமஸ்காரம்.

4. மன்னனைத் தெய்வமாக் குடிகளும், மன்னவன்
மன்னுயிர் தன்னுயிர் ஆகவுமே
மதித்து வரும்பெரு மாண்புசேர் இந்திய
மாதா! உனக்கு நமஸ்காரம்.

5. ஞாலமெங்கும் வெகுகாலமாக நல்ல
நாகரிகக் குறியாகஉயர்
சீலமும் ஞானமும் சிறக்கும் பாரத
தேவி! உனக்கு நமஸ்காரம்.

---

16. ஆனந்தக்களிப்பு

வாழிய பாரத தேவி— என்றும்
வாழி அவள்புகழ் மகிதலம்மேவி (வாழிய)
வாழி நம்முள் தேசபக்தி—நாளும்
வாழி அதனுடன் நம்ராஜ பக்தி (வாழிய)
வாழி ஜார்ஜ் மன்னவர் வாழி—மிக
வாழி அரசியல் வழிவழி வாழி (வாழிய)

II. செய்யுட் பாடம்.

(1) குறள்.

1. அருளில்லார்க் கவ்வுலகமில்லை; பொருளில்லார்க்
இவ்வுலக மில்லாகி யாங்கு.

பொருள் இலார்க்கு-பொருளில்லாதவர்க்கு, இவ்வுலகம்-இவ்வுலகத்தின்பம், இல்லாதுயாங்கு-இல்லாமைபோல, அருள் இலார்க்கு-உயிர்களின்மேல் அருள் இல்லாதவர்களுக்கு, அவ்வுலகம்-அவ்வுலகத்தின்பம், இல்லை-இல்லையாகும்.

(பொருளில்லாதார்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லையாயினாற்போல உயிர்கள்மேல் அருளில்லாதார்க்கு வீட்டுலகத்தின்பம் இல்லை யென்றபடி)

2. அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்துவிடும்.

அடக்கம்-(ஒருவனை) அடக்கமாகிய அறமானது, அமரருள்-தேவருலகத்தில், உய்க்கும்-கொண்டுபோய்விடும்; அடங்காமை-அடங்காமையாகிய பாவமானது, ஆர்இருள்-பொறுத்தற்கரிய நரகத்தில், உய்த்துவிடும்-செலுத்திவிடும்.

(ஒருவனை அடக்கமாகிய அறம் பின் தேவருலகத்துய்க்கும். அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருளினுள் செலுத்தும்) இருள்-நரகத்தைக் குறிக்கும்.

3. இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்துவிடல்.

இன்னாசெய்தாரை-(தமக்குத்) துன்பந்தருமவைகளைச் செய்தவரை, ஒறுத்தல்-(துறந்தோர்) தண்டித்தலாவது, அவர்நாண-அவர் (தாமே) நாணும் படி, நல்நயஞ்செய்து-அவருக்கு இனிமையான மகிழ்ச்சிகளைச்செய்து, விடல்-(அவ்விரண்டையும்) மறத்தலாம்.

(தமக்கு இன்னாதவற்றைச் செய்தாரைத் துறந்தோர் ஒறுத்தலாவது அவர் தாமே நாணுமாறு அவர்க்கு இனியவற்றைச்செய்து, அவ்விரண்டனையும் மறத்தல்)

4. உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

நட்பு-நட்பாவது, உடுக்கை யிழந்தவன்-(சபையினிடத்து) ஆடை நழுவினவனுக்கு, கைபோல-கையுதவுதல்போல, (சிநேகிக்கப் பட்டவனுக்கு) ஆங்கே-அப்பொழுதே, இடுக்கண்-துன்பத்தை, களைவது ஆம்-நீக்குவதாம்.

(சபை மத்தியில் ஆடை இழந்தவனுக்கு அப்பொழுதே கை சென்று உதவிசெய்து, அவமானத்தைக் களைந்திடுவதுபோல, சிநேகிக்கப்பட்டவனுக்கு துன்பம் வந்ததும் அபபொழுதே சென்று உதவிபுரிந்து அதனைக் களைவதே நட்பாவது)

5. எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

சான்றோர்க்கு-(துறவினாலே) பெரியோர்க்கு, எல்லா-விளக்கும்-(புறத்திருனுள்ள இருளை நீக்குகிற உலகத்தோரது) விளக்குகளெல்லாம் விளக்கு அல்ல-விளக்குகளாகமாட்டா, பொய்யா விளக்கே-(அகத்திருளை நீக்குகிற) பொய்யாமையாகிய விளக்கே, விளக்கு-விளக்காம்.

(புறத்திருள் போக்கும் உலகத்தார் விளக்குகளெல்லாம் விளக்காகா; துறவினாலே மேம்பட்டவர்க்கு விளக்காவது மனத்திருள் போக்கும் பொய்யாமையாகிய விளக்கே விளக்காம்)

6. எண்ணித்துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பதிழுக்கு.

கருமம்-(செய்யத்தக்கதோர்) காரியத்தை, எண்ணி-(முடிக்கும் உபாயத்தை) ஆலோசித்து, துணிக-தொடங்கக்கடவன்; துணிந்த பின்-தொடங்கியபின்பு, எண்ணுவம் என்பது - ஆராயக்கடவோ மென்பது-குற்றமாதலால்.

(தொடங்கி வைத்துப் பின்னெண்ணக்கடவோம் என்றொழிதல் குற்றமாதலால்) செய்யத்தக்க கருமமும் முடிக்கும் உபாயத்தை எண்ணித்தொடங்குக)

7. செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துளெலாந் தலை.

செல்வத்துள் செல்வம்-(ஒருவனுக்குச்) சிறப்புடைய செல்வமாவது, செவிச்செல்வம்-செவியில்வரும் செல்வமாம், அச்செல்வம்-அந்தச் செவிச்செல்வமானது, செல்வத்துள் எல்லாம்-பிறசெல்வங்கள் எல்லாவற்றிலும், தலை-தலைமையாம்.

(ஒருவருக்குச் சிறப்புடைய செல்வமாவது செவியால் வருஞ் செல்வம். அச்செல்வம் பிறசெல்வங்களெல்லாவற்றினும் தலைமையாகலின்)

8. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

சொல்லுதல்-(இத்தொழிலை இவ்வாறுதான் செய்வோமென்று ஒழுங்குபடச்) சொல்லுதல், யார்க்கும்-எவர்க்கும், எளிய-சுலபமேயாகும்; சொல்லியவண்ணம்-அதனை (அச்சொல்லப்பட்ட விதத்தால்) செயல்-செய்தல், அரியவாம்-கஷ்டமாம்.

(நாம் இத்தொழிலை இவ்வாறுதான் செய்வோம் என்று சொல்லுதல் யார்க்கும் எளியது; அதனை அவ்வாற்றானே செய்தல் யாவர்க்கும் அரியவாம்.)

9. தன்னெஞ்சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

தன்னெஞ்சு-(ஒருவன்) தனது நெஞ்சினாலே, அறிவது-அறியப்படுவதொன்றை, பொய்யற்க-(பிறர் அறியமாட்டாரென்று) பொய்யாதொழியக்கடவன்; பொய்த்தபின்-பொய்த்தானாயின், தன் நெஞ்சே-(அதனையறிந்த) தனதுமனமே, தன்னை-(அப்பாவத்திற்கு சாக்ஷியாக நின்று) தன்னை, சுடும்-வருத்தும் (அதன் பயனாகிய துன்பத்தை யடைவிக்கும்)

(ஒருவன் தன்னெஞ்சறிவதொன்றனைப் பிறர் அறிந்திலர் என்று பொய்யாதொழிக; பொய்த்தானாயின் அதனை யறிந்த தன்னெஞ்சே அப்பாவத்திற்கு சாட்சியாக நின்று, தன்னை அதன் பயனாய துன்பத்தை யெய்துவிக்கும்.)

10. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

தீயினால்-(ஒருவனையொருவன்) நெருப்பால், சுட்டபுண்-சுட்ட புண்ணானது, (உடம்பினிடத்தே யிருந்தாலும்), உள்-மனத்தினிடத்தே, ஆறும்-(அப்போதே ஆறும்); (அப்படியல்லாமல்) நாவினால்-(தீயசொற்களுடைய) நாவினாலே, சுட்டவடு-சுட்டவடுவானது ஆறாது-(அம்மனத்தினிடத்து எப்போதும்) ஆறாது.

(ஒருவனை யொருவன் தீயினாற்சுட்டபுண் உடம்பின்மேலிருப்பினும் மனத்தின்கண் அப்பொழுதே ஆறும். அவ்வாறன்றி கொடிச்சொற்களையுடைய நாவினாற் சுட்டவடு மனத்தின்கண் எப்பொழுதும் ஆறாது)

11. நன்றிமறப்பது நன்றன்று; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று.

நன்றி-(ஒருவன் முன்செய்த) நன்மையை, மறப்பது-மறந்து விடுதல், நன்று அன்று-(ஒருவனுக்கு) தருமமல்ல; நன்று அல்லது-(அவன்செய்த) தீமையை, அன்றே-செய்தபொழுதே மறப்பது-மறந்துவிடுதல், நன்று-அறமாம்.

(ஒருவன் முன்செய்த நன்மையை மறப்பது ஒருவனுக்கு அறனன்று; அவன்செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறன்.)

12. யாகாவாராயினும் நாகாக்க ; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

யா-(காக்கவேண்டுவன) யாவையும், காவார் ஆயினும்-காக்க மாட்டாராயினும், நா-நாவொன்றையும், காக்க - காக்கக்கடவர் ; காவாக்கால்-அதனைக் காக்கமாட்டாராயின். சொல்லிழுக்குப்பட்டு. சொற்குற்றத்திலே யகப்பட்டு, சோகாப்பர்-(தாமே) துன்பப்படுவர்.

(தன்னாற் காக்கப்படுவன எல்லாவற்றையும் காக்கமாட்டாராயினும் நாவொன்றனையுங்காக்க ; அதனைக் காவாராயின் சொற்குற்றத்தின்கட்பட்டுத் தாமே துன்புறுவர்.)

---

(2) நாலடியார்.

1. குஞ்சியழகும் கொடுந்தானை கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாமென்னும்நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு.

குஞ்சியழகும் - மலர்முடியின் அழகும், கொடுந்தானை-மடிப்புள்ள ஆடையினது, கோடு அழகும்-கரையின் அழகும், மஞ்சள்

அழகும்-கலவைப்பூச்சினது அழகும், அழகு அல்ல-அழகு ஆகமாட்டா; நெஞ்சத்து-மனத்தில், யாம்-நாம், நல்லம் - நற்குணமுடையோம், என்னும்-என்று காண்கிற, நடுவு நிலைமையால்-கோணுதல் இல்லாத தன்மையால், கல்வி அழகே அழகு-படிப்பினாலுண்டாகும் அழகே அழகாம்.

2. கல்வி கரையில ; கற்பவர் நாள்சில;
மெல்லநினைக்கிற் பிணிபல; தெள்ளிதின்
ஆராய்ந்தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.

கல்வி-வித்தைகளாகிய (கடல்களோ), கரைஇல - கரையை (அளவை) யுடையன அல்ல ; கற்பவர்-அவற்றைப் படிப்பவரது நாள்-வாழ்நாட்கள், சில-சிலவாம்; மெல்ல நினைக்கின்-விரைவின்றி ஆலோசித்துப் பார்த்தால், (அவ்வாழ்நாள் சிலவற்றுள்ளும்) பிணி-நோய்களோ, பல-பல உள்ளன; (ஆதலால்) நீர் ஒழிய-நீர் ஒழிப் பிரித்துவிட்டு, பால் உண்டுருகின்-பாலை மாத்திரமே உண்ணுகின்ற அன்னப்பறவைபோல, தெரிந்து - (நூல்களின் தன்மைகளைப்) பகுத்து அறிந்து, தெள்ளிதின்-தெளிவாக, ஆராய்ந்து-ஆராய்ச்சி செய்து, அமைவு உடைய-சாரமாக உள்ள ஞானநூல்களையே, கற்ப (அறிவுடையோர்) கற்பார்கள்.

3. களர்நிலத்துப் பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத் தோராயினும் கற்றறிந்தோரைத்
தலைநிலத்து வைக்கப்படும்.

களர்நிலத்து-(இழிவாகிய) உவர்நிலத்தில், பிறந்த-உண்டான, உப்பினை-உப்பை, சான்றோர்-பெரியோர், விளைநிலத்து-விளைகின்ற

(நல்ல) நிலத்தில் தோன்றிய, நெல்லின்-நெல்லினும் விழுமிதுஆ-சிறந்ததாக, கொள்வர்-கொள்வார்கள்; (அதுபோலவே) கடைநிலத்தோர்-தாழ்ந்த சாதியிற் பிறந்தவர்கள், ஆயினும்-ஆனாலும், கற்று அறிந்தோரை-(நூல்களைப்படித்து அவற்றின் பொருளை) அறிந்தவர்களை, தலைநிலத்து-மேன்மையான இடத்தில், வைக்கப்படும்-வைத்துக் கௌரவிக்கவேண்டும்.

4. முன்னரே சாநாள் முனிதக்க மூப்புள;
பின்னரும் பீடழிக்கும் நோயுள;—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதும்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

முன்னரே—(உங்கள்) முன்னமே, சாம் நாள்—இறக்கும் காலமும், முனி தக்க மூப்பு—வெறுத்தற்குத்தக்க கிழத்தனமும், உள-உள்ளன; பின்னரும்—அவை மாத்திரமேயன்றி மேலும், பீடு அழிக்கும் நோய்—வலிமையை யழிக்கும்படியான வியாதிகளும், உள-உள்ளன; (ஆகலால்) கைத்து—கைப்பொருள், உண்டாம் போழ்து—உண்டாயிருக்குங் காலத்தில், கொன்னே—வீணாக, பரவன் மின்-(மேலும் சம்பாதிப்பதற்கு) அலையாதிருங்கள்; பற்றன் மின்-(உள்ள பொருளை உலோபத்தால்) இறுக்கிப் பிடியாதிருங்கள் பாத்து உண்மின்-(யாவர்க்கும் சோறு முதலியவற்றையும்) பகுத்துக் கொடுத்து மிகுதியை உண்ணுங்கள்; யாதும்—(பிறர் யாசிக்கப் பட்டவற்றுள்) எதையும், கரவன்மின்-ஒளியாதிருங்கள்.

5. நன்னிலைக்கண் தன்னைநிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும் நிலையினும்
மேன்மேலுயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலைவாகச் செய்வானுந்தான்.

நல்ல நிலைக்கண்-நல்ல நிலையிலேயே, தன்னை நிறுப்பானும்-தன்னை வைப்பவனும், தன்னை நிலைகலக்கி கீழிடுவானும்-(தான்

இருக்கின்ற நல்ல நிலையினின்று) கலங்கச்செய்து தன்னைக் கீழ்ப் பட்ட நிலையிற் சேர்க்கிறவனும், நிலையினும்-தான் இருக்கும் நிலையி லிருந்து, மேல்மேல் உயர்த்து நிறுப்பானும்-மிக உயர்ந்த நிலைமை யில் தன்னை உயர்ந்து நிற்கச் செய்பவனும், தன்னை-தன்னையே, தலை ஆக செய்வானும்-(பிறர் பலரினும்) முக்கியமாகச் செய்பவ னும், (எல்லாம்) தான்-தானேயாவான்.

6. நல்லா ரெனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினும் அடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக்குமியுண்டு; நீர்க்கு நுரையுண்டு;
புல்லிதழ் பூவிற்கு முண்டு.

நல்லார் என-நற்குண நற்செய்கையுடையாரென்று ஆராய்ந் தறிந்து, தாம்-தம்மால், நனி விரும்பிக் கொண்டாரை-மிக விரும்பி சிநேகம் செய்து கொள்ளப்பட்டவரை, அல்லார் எனினும்-(முத லில் தாம் தேறியபடி) நற்குண நற்செய்கை யுடையவர் அல்லாத வர் என்று அறிந்தாலும், அடக்கிக் கொளல்வேண்டும்-(அவர் குற் றங்களைப் பிறர் அறியக்கூறி வெளிப்படுத்தாமல் தம் மனத்திலேயே) அடக்கிவைத்துக் கொள்ளுதலே தகுதியாகும், (ஏனெனில்) நெல் லுக்கு-(யாவரும் உணவின் பொருட்டு மிக்க விருப்பத்தோடு உண ணப்படுகிற) நெல்லுக்கும், உமியுண்டு-பயனற்ற அதன் உமியாகிய குற்றம் உள்ளது.) நீர்க்கு-(யாவராலும் குடிப்பதன் பொருட்டு மிக விரும்பியடையப்படுகிற) நீருக்கும், நுரை உண்டு-நுரையாகிய குற றம் உளது; பூவிற்கும்-சிறப்புடைய மலருக்கும், புல் இதழ் உண்டு- (பயனற்ற) அதனை மேல் தழுவியுள்ள புறவிதழாகிய குற்றம் உளது..

(3) பழமொழி.

1. பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந் தன் வாயாற் கெடும்

நல்லாய்!—ஏ பெண்ணே! மணலுள் முழுகி-மணலுள்ளே முழுகி மறைந்து கிடக்கும் நுணலும்-ஒளிந்திருக்கும் தவளையும், தன் வாயால் கெடும்-தன் குரலைக்காட்டி தன் வாயாலே தன்னைத் தின்பார்க்கு அகப்படும், (அதுபோல) பொல்லாத சொல்லி-பிறரைப் பொல்லாதனவற்றையுஞ் சொல்லி, மறைந்து ஒழுகும்பேதை-ஒளித்தொழுகும் அறிவில்லாதவன், தன் சொல்லாலே-தான் சொல்லும் சொல்லாலே, தன்னைத் துயர்ப்படுக்கும்-தன்னைத் துன்பத்தின்கண் அகப்படுத்திக் கொள்வன்.

பழமொழி—"தவளையும் தன் வாயால் கெடும்"

2. மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார் பின்னைவழி நினைந்து
நோய்காண் பொழுதின் அறஞ்செய்வார்க்காணுமை
நாய் காணிற் கற் காணு வாறு.

மாய்வதன் முன்னை—இறப்பதன் முன்னே, வகைப்பட்ட-பலவகைப்பட்ட, நல்வினை-புண்ணியத்தை, ஆய்வு இன்றி-இன்ன காலத்தில் செய்வோமென்று விசாரியாமல், பின்னை வழி நினைந்து-பின்பே செய்வோமென்று நினைத்திருந்து, செய்யாதார்-கையில் பொருள் பெற்றபோதே செய்யாதவர், நோய் காண்பொழுதின்-தமக்கு ஒரு நோய் முடிவாகி வந்து சேர்ந்த பொழுதே, அறம் செய்வர் காணுமை-(அறஞ்செய்ய நினைத்துத் தம் பொருளைக்கொண்டு

அறஞ் செய்கவென்று சொன்னால் அவ்விதம்) அறஞ் செய்வாரைப் பெறாமை, நாய்காணின்-நாயைக் கண்டபொழுது, கல்காணா ஆறு-கல்லைக் காணாத விதம் போலும்.

பழமொழி-நாயைக் கண்டால் கல்லைக்காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம்.

3. நெறியால் உணராது நீர்மையுமின்றிச்
சிறியார் எளியரால் என்று—பெரியாரைத்
தங்கணோர் வைத்துத் தகவல்ல கூறுதல்
திங்களை நாய் குரைத்தற்று.

பெரியார்-(அறிவுடைய) பெரியோர்களை, சிறிதார்-சிறியவர்கள், நெறியால் உணராது-முறைப்படி தெரிந்து கொள்ளாது, நீர்மையும் இன்றி-தகுதியும் இல்லாமல், எளியர் என்று-எளியரென்று எண்ணி, தங்கள் நேர் வைத்து-தங்களுக்குச் சமானமாகக்கொண்டு, தகவு அல்ல கூறுதல்-தகுதியல்லாத வார்த்தைகளைச் சொல்லுதல், நாய் திங்களைக் குறைத்தற்று-நாய் சந்திரனைப் பார்த்துக் குரைத்தாற் போலும் ஆகும்.

பழமொழி—"சந்திரனைப் பார்த்து நாய் குலைத்தாலதென்ன?"

4. கன்றிமுதிர்ந்த கழியப்பல் நாட் செயினும்
என்றும் சிறியார்கண் என்றுனுந் தோன்றாவாம்;
ஒன்றாய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றில் மேல் இட்ட விளக்கு.

கன்றி-கோபித்து, முதிர்ந்த-முதிர்ந்த செயல்களை, கழிய-மிக பல்நாள் செயினும்-பலநாட்கள் செய்தாலும், ஒன்றும்-அவற்றுள் ஒரு குற்றமும், சிறியார்கண்-சிறியாரிடம், என்றுனும்-எவ்வளவாகவும், தோன்றாவாம்-தெரியாது;

உயர்ந்தார்படும் குற்றம்-உயர்ந்தவர்க்கு உளதாகும் குற்றம், ஒன்று ஆய்விடினும்-ஒன்றேயாயினும், குன்றின்மேல் இட்டவிளக்கு -அது மலையின் மேலிட்ட தீபத்தைப்போல் விளங்கும்.

பழமொழி "குன்றின்மேலிட்ட விளக்குபோல்"

---

4. நள வெண்பா

நிடத நாட்டை ஆண்டுவந்த அரசன் நளன். அவனது தலைநகரம் மாவிந்த நகரம். அவன் ஒருநாள் தன்தோழியர்கள் பின் தொடர பூக்கொய்யும் பொருட்டு ஒரு சோலைக்குள் புகுந்தான். அச்சோலைக்குள் ஒரு அழகிய தடாகம் ஒன்றுண்டு. அத்தடாகத்தில் ஒரு அரச அன்னம் விளையாடிக்கொண்டிருந்தது. அதைப் பிடித்துத் தரும்படி அரசன் தோழியர்களைக் கேட்டான்; உடனே அவர்கள் அவ்வன்னத்தைப் பிடித்து வந்து அரசன் முன்னர் விட்டார்கள். அன்னமானது தன் சுற்றத்தைவிட்டு பிரிந்ததனால், அரசனைக் கண்டு பயப்பட்டது. அன்னம் தன்னைக்கண்டு பயந்ததைக் கண்ட அரசன், "அன்னமே! உன் அழகிய நடையையும், மாதர்களது நடையையும் பார்த்து எது சிறந்தது என்பதை அறியும் பொருட்டே உன்னைப்பிடித்து வரச்செய்தேன்" என்றான். அதைக் கேட்டு அன்னம் மகிழ்ந்து, "ஓ அரசர் பெருமானே! விதர்ப்ப நாட்டை ஆளுகிற வீமராஜனுக்கு ஒரு புத்ரியுண்டு. அவள் பெயர் தமயந்தி; அவள் உமக்குத் தகுந்த நாயகியாவாள்" என்றது. பின்னும் சொல்லுகிறது.

(அன்னம் நளனுக்குத் தமயந்தியின் சிறப்பைக் கூறுதல்)

1. நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணாவதன மதிக்குடைக்கீழ்மங்கையர்கள்
ஆளுமே பெண்மை யரசு.

நாற்குணமும்-(ஏ)-(அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும்) நான்கு குணங்களுமே, நாற்படை ஆ—(தேர், யானை, குதிரை, காலாள் என்று சொல்லும்படியான) நான்கு வகைச் சேனையாகவும், ஐம்புலனும்-ஐந்துவித அறிவிற்கு இடமான ஐந்து இந்திரியங்களுமே,நல் அமைச்சு ஆ-நல்ல மந்திரியாகவும், ஆர்க்கும்-(பாதத்தில்) ஒலிக்கின்ற, சிலம்பே-சிலம்புகளே, அணிமுரசு ஆ-அழகிய முரசு வாத்தியமாகவும், கண்ணே-கண்களே, வேல்படையும் வாளும் ஆ-வேலாயுதமும் வாளுமாகவும், வதனமதி குடைகீழ்-முகமாகிய சந்திரவட்டக் குடையின்கீழ், பெண்மை-பெண் தன்மையை, அரசு ஆளும்-அரசாள்வான்.

நளன் அதைக்கேட்டு, "நீ தமயந்தியிடம் தூதுபோய்எவ்வாறு வது அவளை என்னை மணந்துகொள்ளச் செய்வாயாக" என்று வேண்டினான். அன்னமும் நளனிடம் விடை பெற்றுக்கொண்டு தமயந்தியிடஞ் சென்றது. அப்பொழுது தமயந்தி தன் தோழியர்களுடன் ஒரு சோலையில் இருந்தாள். அன்னத்தைக் கண்டதும் அவள் தன் ஆடல் பாடல்களை விட்டுத் தனியாக வந்து அன்னத்தைக் கண்டு, "நீ என்னை நாடிவந்த காரணம் என்ன?" என்றாள். அப்பொழுது அன்னம் நளனுடைய பெருமையை அவளிடம் சொல்லுகிறது.

(நளனைப்பற்றி அன்னம் தமயந்திடம் கூறுதல்)

2. செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு.

உனக்கு வேந்தன்-உனக்குத் தலைவன், செம்மனத்தான்-நடுநிலைமையுள்ள மனமுடையவனும், தண் அளியான்-குளிர்ந்த

16878

கருணையையுடையவனும், செங்கோலினை-முறைதவராது அரசு செய்பவனும், மங்கையர்கள் தம் மனத்தை-மங்கைப் பருவமுடைய மாதர்களது மனத்தை, வாங்கும்-தன் வசப்படுத்தும் தடம் தோளான்-விசாலமான தோள்களையுடையவனும், மெய்ம்மை-சத்தியத்தையுடைய, நளன் என்பான்-நளனென்று சிறப்பித்து சொல்லப்படும் அவன். மேல் நிலத்தும்-சுவர்க்க வுலகத்தாரிலும், நால் நிலத்தும்-(குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல் என்று சொல்லப்படும்) பூமியிலுள்ளவர்களிலும், மிக்கான்-சிறந்து விளங்குபவனாய், உளன்-இருக்கின்றனன்.

அழகு நிறைந்த தமயந்திக்குச் சுயம்வர ஓலையைப் பல தேச அரசர்களுக்கும் போக்கினான் வீமன். பூலோக அரசர்களும் தேவர்களும் தமயந்தியின் சுயம்வர மண்டபத்திற்கு வந்திருந்தார்கள். அப்பொழுது அவள் தேவர்களையும் விட்டு நளனுக்கே மாலை சூட்டினாள்.

(தமயந்தி நளனுக்கு மாலை சூட்டுதல்)

3. விண்ணரசரெல்லாரும் வெட்கிமனஞ் சுளிக்கக்
கண்ணகல் ஞாலங்களிகூர—மண்ணரசர்
வன்மாலை தன்மனத்தே சூடவயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்:

பொன்-இலக்குமியைப் போல்பவளாகிய தமயந்தி, விண் அரசர் எல்லாரும்-தேவலோகத்து அரசர்கள் யாவரும், வெள்கி-வெட்கமுற்று, மனம்சுளிக்க-(வெளித்தோன்றாமல்) மனதிலேயே கோபம் கொள்ளவும், கண் அகல் ஞானம் களிகூர-இடம் அகன்ற பூமியிலுள்ளவர்கள் மிகுந்த சந்தோஷத்தையடையவும், மண் அரசர்-பூலோகத்தரசர்கள் யாவரும், தம் மனத்து-தங்கள் மனங்களில், வன்மாலை-வலிய மயக்கத்தை, சூட-கொள்ளவும், வயம் வேந்தை-வெற்

றியையுடைய நளசக்ரவர்த்திக்கு, பொன்மாலை-(தன் கையிலிருந்த) அழகிய சுயம்வரமாலையை, சூட்டினள்-(கழுத்திற்) போட்டாள்.

தமயந்தி தங்களில் ஒருவருக்கும் மாலை சூட்டாததால் தேவர்கள் மன வருத்தத்தோடு தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்ல, எதிரே கலி புருஷன் வருவதைக் கண்டார்கள். "நீ இப்பொழுது வரக் காரணம் என்ன?" என்று கலியைக் கேட்டார்கள். அதைக் கேட்டுக் கலியும், "நான் தமயந்தியை மணந்து கொள்ளப்போகிறேன்" என்றான். பின்னர் தேவர்கள் தமயந்தி நளனுக்கு மாலை சூட்டியதைத் தெரிவித்தார்கள். அப்பொழுது கலி புருஷன் கோபித்துச் சென்றான்.

விவாகமானவுடன் நளனும் தமயந்தியும் 12 வருஷகாலம் இன்பமாகக் காலங்கழித்து வந்தார்கள். தமயந்தி ஓராண் குழந்தையையும் ஒரு பெண் குழந்தையையும் பெற்றாள். கலியும் இவர்களை எவ்வாறு துன்புறுத்தலாமென சமயம் பார்த்துக்கொண்டேயிருந்தான். ஒருநாள் நளன் தனது நித்திய கருமங்களைச் செய்யவந்தவன், தன் பாதங்களை நன்றாகக்கழுவ மறந்துவிட்டான். அதே காரணமாகக் கலி அவனைப் பற்றிக் கொண்டான். நளனது ஒன்றுவிட்ட தமயனாகிய புட்கரனுக்குத் தான் உதவியாக நின்று அவனை நளனோடு சூதாட கலி ஏவினான். நளனும் புட்கரனோடு சூதாடித் தன் நாடு நகரங்களை யிழந்தான். இழந்த அரசன் தன் மக்களை வீமனிடம் அனுப்பிவிட்டுத் தானும் தமயந்தியுமாகக் காட்டை நோக்கிச் சென்றார்கள்; அங்குள்ள பாலைவனத்தில் ஓர் அழகிய பட்சியைக்கண்டு அதை தனக்குப் பிடித்துத் தரும்படி தமயந்தி நளனைக் கேட்டனள். நளனும் ஒரு வஸ்திரத்தை இருவரும் உடுத்திக்கொண்டு, மற்றொரு வஸ்திரத்தை அப்பட்சியின்மேல் வீசினான். அப்பறவையும் அந்த வஸ்திரத்தோடு பறந்து போய்விட்டது. இருவரும் ஒரு துணியோடு போகும்போது இருட்டிவிட்டது. பிறகு தங்குவதற்கு

அங்கே ஒரு பாழடைந்த மண்டபத்தைக் கண்டார்கள். அம்மண்டபத்தை யடைந்து நித்திரை செய்யும் பொழுது நளனுக்கு தமயந்தியைவிட்டுப் பிரிய ஓர் எண்ணம் உதித்தது. அவ்வாறு செய்ய கலி ஒரு வாளாயுதம்போல் அங்கே கிடக்க நளன் அதைக்கொண்டு ஒன்றுயிருந்த வஸ்திரத்தைப் பாதியாக அறிந்தான். பிறகு தமயந்தி தனித்திருந்தால் எவ்வாறு துன்பத்தையடைவாள் என்பதை நினைத்திருந்துப் பிறகு, அவளை விட்டுப் பிரிந்தான்.

(நளன் தமயந்தியை விட்டுப் பிரிய முயலுதல்)

4. ஒற்றைத்துகிலும் உயிரும் இரண்டாக
முற்றும் தன் அன்பை முதலோடும்—பற்றி
அரிந்தான் அரிந்திட்டவள் நிலைமை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து.

ஒற்றைத் துகிலும்-ஒன்றாகிய ஆடையும், உயிரும்-(ஒன்றாகிய) உயிரும், இரண்டு ஆக-இரண்டாகும்படி, முற்றும்-நாளுக்கு நாள் வளர்கின்ற, தன் அன்பை-(அவளிடத்து வைத்த) தனது அன்பை, முதலோடும்-வேரோடும், பற்றி-(வாளைப்) பிடித்து, அரிந்தான். அரிந்தனன்.

அரிந்திட்டு-(ஆடையை) அரிந்த பிறகு. அவள் நிலைமை-அவளது தனித்திருக்கும் நிலைமையை, நெஞ்சில்-தன் மனத்தில், தெரிந்தான்-தெரிந்துகொண்டவனாய், திகைத்து இருந்தான்-(ஒன்றும் தோன்றாமல்) பிரமித்து உட்கார்ந்தான்.

தமயந்தியை விட்டுப்பிரிந்த நளன் அயோதிக்குச் சென்றான். அவன் தன் உருவை மாற்றிக்கொண்டான். வாகுகன் என்னும் பெயரைவைத்துக்கொண்டு அந்நகர் அரசனாகிய இருதுபர்ணனிடம் சமையற்றொழிலில் அமர்ந்தான். தமயந்தி துயில் நீங்கிப்பார்த்-

தாள். தன் நாயகனைக்காணுமல் மிகவும் துக்கித்தாள். பிறகு ஒரு வாருதேறி தன்தந்தையூரைச்சேர்ந்தாள். அங்கிருந்து ஊரெங்கும் நளனைத்தேடும்பொருட்டு அவள் ஒரு புரோகிதனை அனுப்பினுள். அவன் அயோத்தி நகரடைந்து வீதியின் வழியாய் செல்லும் பொழுது தமயந்தி தனக்குரைத்தவாறு பின்வருமாறு கூறிக்கொண் டுசெல்கிருன்.

(புரோகிதன் வார்த்தைகளைக்கேட்ட நளன் வெளிவரல்)

5. கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ-தானென்று
சாற்றினுள்; அந்தவுரை கார்வேந்தன் தன் செவியில்
ஏற்றினுன் வந்தான் எதிர்.

கானகத்து-வனத்திலேயே, காதலியை-தன்னிடம் அன்புள்ள தன் மனைவியை, கார் இருளில்-மிக்க இருட்டில், கைவிட்டுப்போன துவும்-விட்டுப்பிரிந்ததுவும், வேந்தர்க்கு-அரசராயினுர்க்கு- போது மோ-பொருந்துமோ? என்று சாற்றினுன்-என்று புரோகிதனுகிய சுவேதன் கூறினுன்; அந்த உரை-அச்சொல்லை, தார்வேந்தன்-(தம யந்தியினுல்) மாலை அணியப்பெற்ற நளராசன், செவியில் ஏற்றினுன்-காதால் கேட்டான்; எதிர்வந்தான்-(சுவேதனுக்கு) எதிரேவந்தான். (நளன்)

(நளன் புரோகிதனுக்குச் சமாதானம் சொல்லல்)

6. ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும்
பண்டைவிதியின் பயனேகாண்—தண்தாளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளைத் தன்
மனத்தே நீத்தானென்றையுறேல் நீ.

ஒன்றொடிதன்னை-பிரகாசமுடையவளை யலை யணிந்தநாயகியை உறக்கத்து-தூக்கத்தினிடத்தே, நீத்ததுவும்-விட்டுப்பிரிந்ததுவும், பண்டைவிதியின்-பழையவினையினது, பயனே-பயனாகும், தண்தரளம்-குளிர்ந்த முத்துக்களினாற் செய்த பூ-அழகிய, தாமம்-மாலைகளையுடைய, வெண்குடையான்-வெண்கொற்றக்குடையையுடைய வீமராசனது, பொன்-அழகிய, மகளை-தமயந்தியை- வெம்மனத்து-வெப்பமானகாட்டில். நீத்தான் என்று-(அவன் நாயகன் வேண்டுமென்று) கைவிட்டானென்று, நீ ஐயுறேல்-நீ சந்தேஹப்படாதே.

இருதுபர்னனிடம் சிலதூதர்வந்து தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரம் நாளையதினம் நடைபெறுகிறது என்று கூறினார்கள். அதைக்கேட்டு அரசன் வாகுகனைத்தேர்ப்பாகனாக வரச்செய்து குண்டினபுரம் அடைந்தான். தேரை ஓட்டிச்சென்ற வாகுகனாகிய நளன் தான் தேர்ச்சாரதியான படியால் தான் தனியாகச் சமையல் செய்து சாப்பிட்டான். அவனிடம் தமயந்தி தன் குழந்தைகளை யனுப்பி அவனுடைய செயலை அறிந்துவரும்படி ஒரு தாதியையுங்கூட அனுப்பினாள்.

(நளன் தன் குழந்தைகளைக்கண்டு வினவுதல்)

7. மக்களை முன்காணாமன நடுங்கா வெய்துயிராப்புக்
கெடுத்து வீரப்புயத்தணையா—"மக்காள்! நீர்
என்மக்கள் போல்கின்றீர்; யார் மக்கள்?" என்று
வன்மக்களியானைமன். [னைத்தான்

வன்மம்—தீராப்பகைக்குண முள்ள, களி யானைமன்-மதத்த யானைப்படையையுடைய நளனாகிய வாகுகன், மக்களை-பிள்ளைகளை, முன்-தன் எதிரில், காணா-கண்டு, மனம் நடுங்கா-மனம் நடுங்கி, வெய்து உயிரா-பெருமூச்சு விட்டு, புக்குஎடுத்து-(அவர்களிடம்) புகுந்தெடுத்து, வீரம்-வீரந்தங்கிய, புயத்து அணையா-புயங்களில்

அணைத்து 'மக்காள்-பிள்ளைகளே! நீர்-நீங்கள், என்மக்கள் போல் கின்றீர்-என்பிள்ளைகளைப்போலக்காணப்படுகின்றீர்;யார்மக்கள்-எவருடைய பிள்ளைகள்? என்று உரைத்தான்-என்று வினவினான்;

(குழந்தைகள் பதிலளித்தல்)

8. "மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள் யாம்;
அன்னைதனைக் கான்விட்டவனேக-இந்நகர்க்கே
வாழ்கின்றோம். எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்" என்றார் அழுது.

மன்னன்-அரசனாகிய, நிடதத்தார்-நிடதேசத்தார், வாழ்வேந்தன்-வாழ்வதற்குக்காரணமாகிய அரசாட்சியை 'புடையானுடைய, மக்கள்யாம்-பிள்ளைகள் நாங்கள்; அன்னைதனை-எங்களுடைய தாயை கான் விட்டு-காட்டிலேவிட்டு, அவன் ஏக-அவன்போனமையால், இந்நகர்க்கே-இந்நகரத்திலேயே, வாழ்கின்றோம்-வசிக்கிறோம், எங்கள் வளநாடு-எங்களுடைய வளப்பமாகிய நிடதநாட்டை, மற்றுஒருவன் வேறு அரசன், ஆள்கின்றான்-ஆண்டுவருகின்றான்; என்றார் அழுது-என்று அழுது கொண்டுசொன்னார்கள்.

தேரோட்டி வந்தவன் நளனே என்பதையறிந்த தமயந்திதன் தந்தையிடம் முறையிட வீமன் வாகுகனிடம் சென்று தன் சுய உருவைக்காட்டும்படி வேண்டினான். அவன் அவ்வாறேதன் உருவை மாற்றிக்கொண்டு பழைய உருவத்தோடு வெளிவந்தான். வீமன் சந்தோஷமடைந்து அவனை அரண்மனைக்கு அழைத்து வந்து விருந்து செய்தான்.

பிறகு நளனை மனைவியுடனும் குழந்தைகளுடனும் மாவிந்த நகரத்திற்கு அனுப்பினான். நளன் புட்கரனோடு திரும்பவும் சூதாடி இழந்த நாடு நகரங்களைப்பெற்றான்:

(நளன் தன் நகருக்குத்திருப்புதல்)

9. கார்பெற்றதோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர் பெற்றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்டமாநகருக்
கேதோ உரைப்பேன் எதிர்.

பார்பெற்று-நிடத தேசத்தைத்திரும்பவும் பெற்று, மாதோடு-தமயந்தியோடு, மன்னன்-நளன், வர-வருவதை, கண்ட-பார்த்த, மா-பெரிய, நகருக்கு-நகர ஜனங்களுக்கு, எதிர்-உபமானம், கார் பெற்ற-மேகம்வரப்பெற்ற, தோகையோ-மயிலோ; கண் பெற்ற-(இழந்த) கண்களைப்பெற்ற, வான்முகமோ-ஒளியாகியமுகமோ, நீர் பெற்று-மழைநீரைப்பெற்று, உயர்ந்த-வளர்ந்த, நிறைபுலமோ-குறைவில்லாவயலோ, ஏது உரைப்பன்-(இவற்றுள்)எதைச்சொல்வேன்?

---

5. தனிப் பாடல்கள்.

1. எண்ணான்கு முப்பத்திரண்டு பல்காட்டி இசையுடனே
பண்ணாகச் செந்தமிழ் பாடிவந்தாலும் இப்பாரிலுளார்
அண்ணாந்துகேட்பர்; அழகழகென்பர்; அதன்பிறகு
சுண்ணாம்பு பட்டஇலையுங் கொடார்கவிசொன்னவர்க்கே

6. இராமச்சந்திர கவிராயர்.

2. வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற்புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட தலைபிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சிற்புண்ணும்
தீருமென்றே சங்கரன்பால் சேர்ந்தேன் அப்பா;

கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும்வேடன்
கொடுங்காலால் உதைத்தபுண்ணும் கோபமாகப்
பஞ்சவரில் ஒருவன் வில்லா லடித்தபுண்ணும்
பாரென்றே காட்டி நின்றான் பரமன்றானே.

7. காளமேகப் புலவர்.

பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடை.

3. ஆடிக்குடத்தடையும், ஆடும்போதே யிரையும்;
மூடித்திறக்கின் முகங்காட்டும்;—ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும்; பாரிற் பிண்ணாக்கு முண்டாம்;
உற்றிடும் பாம் பெள்ளெனவேயோது

8. ஔவை.

4. அரிதரிது மானிடராதலரிது;
மானிடராயினுங் கூன்குருடுசெவிடு
பேடு நீங்கிப் பிறத்தலரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும
ஞானமுங் கல்வியும் நயத்தலரிது;
ஞானமுங்கல்வியு நயந்த காலையும்
தானமுந் தவமுந்தான் செயலரிது;
தானமுந் தவமுந்தான் செய்வராயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே.

9. சிவப்ரகாச சுவாமிகள்.

5. ஆனவ னிடத்திலே யைங்கரன் வந்துதான்
'ஐய! என்செவியை மிகவும்,
ஆறுமுகன் கிள்ளினா' னென்றே சிணுங்கிடவும்
அத்தன் வேலவனை நோக்கி,
விரைவுடன் வினவவே! அண்ணனென் சென்னியில்
விளங்குகண் ணெண்ணினன்' என
வெம்பிடும் பிள்ளையைப் பார்ததுநீ யப்படி
விகடமேன் செய்தா யென,
'மருவுமென் ஸ்கந்நீளம் முழுமளந்தான்' என்ன
மயிலவன் நகைத்து நிற்க
மலையரைய னுதவவரும் உமையவளை நோக்கி "நின்
மைந்தரைப் பாராய் எனக்
கருதரிய கடலாடை உலகுபல அண்டங்
கருப்பமாய்ப் பெற்ற கன்னி
கணபதியை யருகழைத் தகமகிழ்வு கொண்டனன்
களிப்புட னுமைக் காகவே.

III. வசன பாடம்

(1) வீதி விடங்கள் சரித்திரம் (இராமலிங்க சுவாமிகள்)

கடல்சூழ்ந்த உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலுஞ் சிறப்புடையதாய, காவிரி யென்னுந் தெய்வத்தன்மையுள்ள நதியினால் நீர் வளப்பமுள்ளதாய், வாழைச்சோலை, பலாச்சோலை, யாஞ்சோலை, தென்னஞ்சோலை, கமுகஞ்சோலை, கருப்பஞ்சோலை முதலாகிய பலனுள்ள சோலைகள் அணியணியாக ஒன்றையொன்று சூழ்ந்தோங்கப் பெற்றதாய், அசோகு, குருக்கத்தி, சண்பகம், பாதிரி முதலான விருக்ஷங்களால் நெருங்கப்பெற்று, வண்டுகள் பாடுகின்ற மலர்ச் சோலைகளும் தாமரைத் தடாகங்களும் நீர் நிறைந்த ஓடைகளும், பொய்கைகளும், ஏரிகளும், குளங்களும் பல விடங்களிலுமுள்ளதாய், சிதம்பரம், பஞ்சநதம், மத்தியார்ச்சுனம், சம்புகேச்வரம் முதலான திவ்ய க்ஷேத்திரங்கள் இடையிடையிலுள்ளதாய், தியாகராஜப் பெருமானெழுந்தருளிய தெய்வீகம் வாய்ந்த திருக்கோயிலையுள்ளேயுடையதாய், சோழராசர்கள் பரம்பரையாக அரசாக்ஷி செய்வதற்கு உரிய ராஜதானியாய், விளங்கிய திருவாரூர் என்று ஒரு நகரம்உண்டு. அந்நகரத்திலே, சூரிய குலத்திற் பிறந்து அரசாக்ஷி செய்துவந்த சோழ ராஜர்களிற் சிறந்தவராய் எல்லா உயிர்களுக்கும் இதம் செய்கின்றவராய், வேத மோதுதலும், யாகஞ்செய்தலும், இரப்பவர்க்கீதலும், பிரஜைகளைத் காத்தலும், ஆயுத வித்தையில் பழகுதலும், பகைவரை யழித்தலுமென்னும் ஆறு தொழில்களும் உடையவராய, வழக்கையறிவிப்பவரையும், தங்களுக்குள்ள குறைகளைச் சொல்லிக் கொள்பவரையும் இலேசிலே தமது சமுகத்திற்கு அழைப்பித்து அந்த வழக்கைத்தீர்த்தும் அக்குறைகளை முடித்தும் கொடுப்ப

வராய், பாலொடு பழஞ் சேர்ந்தாற்போல முகமலர்ச்சியோடு இனிய வசனம் சொல்பவராய் தர்மமே உருவாகக் கொண்டு நடுநிலையி லிருந்து மனுநீதி தவறாது விளங்கிய மனுச்சோழன் என்னும் பெயரையுடைய சக்கரவர்த்தியானவர் செங்கோல் செய்து அர சாட்சிசெய்து வந்தார்.

(2) கடன்படல்

பொருளில்லையானால் கூலித்தொழில் செய்து வயிறு வளர்க்கி னும் வளர்க்கலாம்; பிச்சையேற்று உண்ணினும் உண்ணலாம்; பசி நோயால் வருந்தி இறக்கினும் இறக்கலாம்; இவைகளெல்லாம் அவ மானங்களல்ல; இவைகளினாலே பிறருக்கு யாதொரு கேடுமில்லை. இவைகளினால் ஒருவருக்கும் அஞ்சவேண்டுவதில்லை, இவைகளி னாலே துன்பமுண்டாகினும் அத்துன்பமோ மிகச்சிறிது. அச்சிறு துன்பமும் நல்லறிவோடு அமைந்து சிந்திக்கும்போது நீங்கிவிடும். கடனோ இப்படிப்பட்டதன்று, பெருவியாதி முதலிய கொடு நோய் களினால் உண்டாகும் துன்பத்தைப் பொறுக்கினும் பொறுக்கலாம்; கடனாலுண்டாகும் துன்பத்தைப் பொறுத்தல் அரிது அரிது. கடன் படக் கூசாதவர் பொய்சொல்லக் கூசார்; கொலை செய்யக்கூசார்; கடன்படல் எல்லாப் பாவங்களையும் வலிந்து கை பிடித்தழைக்கும் ஆது.

(3) தேச ஸஞ்சாரம்

பல தேசங்களிலும் சஞ்சாரம் பண்ணுவதில் ஜனங்களுக்கு விவேகமும் அடக்கமும் உண்டாகின்றன. தேன், ஏறமுடியாத பாறைகளிலும், முட்செடிகள் மேலும், ஆழ்ந்த கிணறுகளினுட் புறத் தும், வழி நடைகளில் தைக்கெட்டிய தூரத்திலும், கைக்கெட்டாத நீண்ட கொம்புகளிலும், மற்றிடங்களிலு மிருப்பதுபோலக் கல்வி யும், பொருளும், அருளும் பலதேசங்களிலும் பற்பல சாதியாரிடத்

திலும் பல காலங்களிலும் மாறி மாறி வந்து கொண்டிருப்பதால் அடுத்த வீட்டுக்காரரும் தம்மூராருமே தம்மைப் புகழும் பொருட்டு மேற் போக்காய் வேஷதாரிகள் போலிராமல் உண்மையாய்க் கல்வியிலாயினும் செல்வத்திலாயினும், அறிவிலாயினும், அருளிலாயினும் தம் மனமொப்பச் சிறப்படைய வேண்டுவோர் தேச ஸஞ்சாரம் செய்யவேண்டியது முக்கியமாம். இல்வாழ்க்கைக்குப் பற்பல பண்டங்களைப் பல காலத்திலும் பல இடத்திலும் நாம் சேகரம்பண்ணி வைத்துக்கொண்டு சீராய்க் குடித்தனஞ்செய்து வருவதுபோல இந்த மனித வாழ்க்கையில் நாம் சிறப்படைய வேண்டுமானால் கல்வியிலும், செல்வத்திலும், அருளிலும் கடல்போல் வற்றாத தன்மையுள்ள மனிதர்களைப் பல தேசங்களிலும் பல காலத்திலும் சந்தித்துச் சம்பாஷித்து அவற்றில் தேர்ச்சியடையவேண்டும். பல தேசங்களிலும் சஞ்சாரம் பண்ணினவனிடத்தில் அதிக கோபமிராது; ஏனென்றால், அவனிலும் கோபிகளான பலரைச் சந்தித்துக் கோபத்தினால் அவர்கள் பட்ட இடையூறுகளைப் பார்த்தும் கேட்டுமிருக்கலாம். கல்வியும், கேள்வியும், செல்வமும் மிருந்திருந்தாலும் கர்வ மடையமாட்டான்; ஏனென்றால், தன்னிலும் மேலானவர் பல தேசங்களிலுமிருப்பதைக் கண்டு தெளிந்து வந்திருப்பதுதான்.

IV. கீர்த்தனைகள்

நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள்.

ராகம்—சங்கராபரணம்—ஆதிதாளம்.

(ரி2, க2, ம1, த2, நி2)

பல்லவி.

நிஸரி,, காமாபா ரிகமக கரிஸா,, மத பா மா கா ரி
நந்தன் சரித்ரமா னந்தம் ஆனாலு மத்தி
நிஸரி,, கமபாமா கரிஸா நிஸரி,, மாகா ரி ஸா ஸ
யந்தம் பக்திரஸ கந்தம் சொல்ல சொல்ல (ந)

அனுபல்லவி.

கமபா,, தாபா மா காரி கமபா,, தாபாமரகாரி
நந்தன் சரித்திரம்வெகு அந்தம் சிவனாருக்குச்
கமபா,, தாபா மா காரி கமபா,, பா மா கா ரி ஸா
சொந்தம் துலையும் பவபந்தம கேட்டபேர்க்கு

சரணம்.

1. ஏது இவனைப்போலே சாது, பூமியிலிருக்
காது அரிதுஇருக்காது, படைத்த பேர்க்கு (ந)
2. வாடி, மனதிளகிப் பாடி, அரகரா வென்
றாடி, கனகசபை நாடிச் சேருவேனென்ற (ந)
3. அண்டர் கொண்டாடும் சோழ மண்டல நாதனைச்
[சூழக்
கொண்டே மேற்கா நாட்டில் விண்ட ஆதனூரில்
[வாழும் (ந)

ராகம் குறஞ்சி—தாளம் ரூபகம்

(ரி2, க2, ம1, த2, நி2)

ஸாநீஸா ஸாரீகா காகா காகா மாகா
ஸாஸா நீஸாரீ காரீ ,,,,,

1. பித்தந் தெளியமருந்தொன்
றிருக்குது பேரின்ப மறறுள்ளே
காமாபா பாபாபா மாபாதா பாபாபா
காகா, ரீரீ, பாமாகாரீ ஸாநீ
மற்ற மருந்துகள் தின்றால் உள்ளுக்கு
வல்லே வல்லே ஐயோ அடிமை

2. பாம்பும் புலியுமெய் பாடு பட்டுக்
தேடிப் பார்த்துப் பயிரிட்டது.
பாரளந்த திரு மாயனும் வேதனும்
பார்த்துக் களித்த துண்டு.

3. பார்வதி யென்றொரு சீமாட்டியதில்
பாதியைத் தின்றதுண்டு இன்னும்
பாதி யிருக்குது பறையா நீயும்போய்ப்
பாரென்று த்தாரக் தாருந் தாரும்

4. பத்துத் திசையும் பரவிப் படர்ந்தாலும்
பார்த்துப் பிடியாரே
தத்திக் குதித்துத் தாளங்கள் போடுந்
தண்டைச் சிலம்பு கொஞ்சத்

5. தித்திக்கும் தேனே செங்கரும்போ
நல்ல சித்த முடையார்க்கே—என்
சித்தத்தைக் கட்டி யிழுக்குது
அங்கே சென்றால் போதுங் கண்டால் தீரும்

6. ஊரைச் சொன்னாலு மிப்பாவந் தொலையும்
ஊழ்வினைகளு மோடறுக்கும்
பேரைக் கொண்டாடிப் புலம்புகிறார்
வெகு பேர்களுக்குப் பிழைப்பு.

7. சாரு நரைதிரை தீருமருந்துச்
சாதியைப் பாராது— இன்னந்
தீராத நோய்கள் படைத்தவெனக்குத்
தீருந் திருமையே.

ராகம் செஞ்சுருட்டி—ஏகதாளம்.

(ரி2, க2, ம1, த2, நி1,)

,,ரிபாமகா கமகரிஸாஸா,, பதஸா தஸநிதபாபா

1. சிதம்பரம் போகாமல் இருப்பேனோ இந்த
,,தாஸாஸா ரீரீகாகா ,,மகஸா ரீமாகா"
ஜென்மத்தை வீணாக்கி கெடுப்பேனோ

2. பக்தியு மனமும் பொருந்தினதங்கே
சத்தியஞ் சொன்னேன் சடலமுமிங்கே (சி)

3. ஆசையும் நேசமும் ஆனந்தமங்கே
பேசலும் பாசமும் பிதற்றலும்இங்கே (சி)

வேதநாயகம் பிள்ளை கீர்த்தனை.

ராகம் சங்கராபரணம்—ரூபகம் தாளம்.

பல்லவி.

ஸநிபா மக ரிகமப ஸா ஸநி
பணமே உன்னால் என்னகுணமே— தண்டம்
ஸாக கமரி ரிகமபதநி
பண்ணினேன் சற்றுமென் கண்ணில் நில்லாதே

அனுபல்லவி.

மபதநிஸஸ ஸரிஸநிஸஸ
மணமில்லாமத மோகங்குரோதந்துன்
ஸஸநிதபப மபமபதநி
மார்க்கமும்மூர்க்கமும் யார்க்குமேபோதிக்கும்

சரணம்.

கமபபபப மபமகமரி கமபமகம
பதபா பம

1. தேடிஉனை வைத்து மூடியவர்க்குநீ
தீர்க்காயுசுதரு வாயே இனி
நாடியமன்வந்து சாடிடும் போதுநீ
நானென்று முன் வருவாயோ
நிஸரி ரிஸஸ ஸரிஸநிஸஸ
ஸரி ஸநி பபதநிஸநிஸஸ

கூடியபேர்கள் குடியைக் கெடுப்பாயே
சொல்லச் சொல்லிப்பின்னும் காட்டிகொடுப்பாயே.
நிஸரிரிஸ்ஸ ஸரிஸநிஸஸ ஸரிஸநிப ப
மபம பதநி
ஓடிஓடியற்பரை ப்போயடுப்பாயே உத்தமரைக்
கண்டால் ஓட்டமெடுப்பாயே. (பணமே)

2. மத்தியில் உன்னைப் படைத்த தல்லால்முன்
வரும்போது கூடவந்தாயோ இஷ்ட
சித்தியும் சத்தியும் நித்தியங் கைகூடக்
சிலாசாஸனம் நீதந்தாயோ?
புத்தியிருக்கும் இடம்விட்டு நீங்குவாய்; பொய்யும்
புரட்டும் உள்ள இடத்தோங்குவாய்;
எத்திசையும் கெடுத்துப் பழிவாங்குவாய்;
ஈயாதவர் கையகப் பட்டுத்தூங்குவாய் (பணமே)

3. மண்ணில் உனைநரர் பண்ணினதன்றி
மனிதரை நீபண்ணி ணுயோ? உயர்
விண்ணினை மண்ணினைப் பண்ணினேன்
நேசம்விலகச் செய்சத்துரு நீயே.
எண்ணரிதான இடமெங்கு ஓடுவாய்;
இந்திரஜாலஞ் செய்து விளையாடுவாய்
வண்ணநரர்கள்மனக்கண்ணை மூடுவாய்
வைத்துப புதைப்பவர் வாயில்மண் போடுவாய்.
(பணமே)

இராம நாடகக் கீர்த்தனை.

விபீஷணர் ஸ்ரீராமருடைய தரிசனஞ் செய்தல்

ராகம் மோகனம்—ஆதிதாளம்

(ரி[1], க[2], த[2],)

பல்லவி.

கா,தபா காரீரீ ஸரிகரி கா,,பாகாரீ ஸாரீ
ராமனைக் கண்ணாரக் கண்டானே விபீஷணன்கை
கா,தபா காரீரீ ஸரிகப ரீஸா
மாமுடி மேல் வைத்துக் கொண்டானே.

அனுபல்லவி

காகக பபபப தாதத ஸஸபத
காமனும் செங்கமலப் பூமனும் பணிபரந்
தரிரிஸ ததபப கதத பகரிஸரி
தாமனை ஆயிர நாமனைக் கோதண்ட

சரணம்

கா,தபாகாரீரீஸாரீ காகா,, பாகாரீஸாரீ
1. வெள்ளமாகிய வானர வர்க்கம் நடுவே தம்பி
மேருமலை போலருகே நிற்கப் பூணில்லாமார்பம்

புள்ளிவில்போடாதமேகம் ஒக்கத் தோள்வளைநீங்கிப்
பூட்டில்லாமந்தரம்போல் சோபிக்க மூன்றுலோகமும்

காக காகரிக பாப பாபபப
கள்ள அரக்கர்தினம் கிள்ளிக் கிள்ளி யருந்தக்
தாததா ததத தாஸ தபததத
கொள்ளை கொடுத்தமரர் துள்ளித்துள்ளி வருந்த
ஸாஸ ஸாஸ ஸஸ தாஸ தாபதத
வள்ளலாகிமுறை உள்ளபடி திருந்தப்
ஸாஸதாத பப கா தபகரி ஸரி
பள்ளி அரவணையைத் தள்ளி எழுந்திருந்த (ரா)

2. தருமமாக ரூபிகரித்தானைப் பிரசண்டகோ
தண்டமும் அண்டமும் பரித்தானைத் தாமரைபூத்த
கருமுகில் போல் அவதரித்தானை மாஉரியைக்
கச்சைபோலவச்சு வரித் தானைச் சனகன் கன்னி
இருவிழியிலுமுள்ள கருமணி எனவந்த
திருஉருவினிலொளி பெருகிடத் தாழ்முந்த
விரதம் கொடுத்தமுடி சிரசினில் கொண்டுசொந்த
அரசன் கொடுத்தமுடி பாதனுக்கன்றுதந்த (ரா)

6. மத்யமாவதி.

(ரி², ம¹, நி¹)

ஆதிதாளம்.

ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

பல்லவி.

ஸரிஸஸநிஸரீ ரிபமரிரீரீஸா,, ரிமபாமரிமரிஸ
பகுடாபி ஷேகம்கொண்டானே ஸ்ரீராமசந்திரன்

அநுபல்லவி.

ரிமரிமபபபப பநிபபபநிமப
ஸகலராசர்களும் ஸகல தேசர்களும்
ஸகல வேதியரும் ஸகலஜாதியரும்
ஸகல மந்திரிகளும் ஸகல தந்திரிகளும்
ஸகல முனிவர்களும் ஸகல மனிதர்களும்
ரிரீரிரிமரிஸ ஸஸாநிநிபநிஸ்
சந்த்ராதிமூவர்களும் இந்த்ராதிதேவர்களும
ஸஸாநிநிபபம மபாமரிமரிஸ
சந்தோஷமாப்பொருந்து சிங்காதனத்திருந்து

சரணம்.

ரிமரிம பபபப பப பாபா பப
மாதவமுனிவர்கள் புடைகூட பல
பாபபாப பப பநிமாபா
வேதவேதியர்கள் மறைபாட
வானவர் ஆனவர் மலர்போட ரம்பை
மேனகை ஊர்வசி நடமாட

ரிமரிம பபபப　　பபபபப நிமப
மகதர்குகுதர்பலர்　　கவுடர்யவனர் பலர்
வடுகர் குடகர்பலர்　　துளுவர் வளவர் பலர்
ரிரீ ரிரி மரிஸ　　ஸஸா ஸநிபநிஸ
வாமா பராக்குவெகு நாமா பராக்குரண
ஸஸா நிநிபபம　　மபாம ரிமரிஸ
வீமா பராக்குரகு　ராமா பராக்கு என　　(மகுடா)

V. வியாசம்.

பொது அறிவில் சொல்லப்பட்ட விஷயங்களைப்பற்றிச் சிறு வியாசங்கள் சொந்த பாஷையிலெழுதலும், சுருக்கியெழுதலும்; அடியிற்கண்டகதைகள்.

1. சுந்தரமூர்த்தி சுவாமிகள்
2. குலசேகராழ்வார்
3. ஐந்தாம் ஜார்ஜ் மகிபர்
4. காளிதாஸர்
5. சங்கராசாரியர்
6. பட்டினத்தடிகள்
7. வித்தியாரண்யர்
8. புகழேந்திப்புலவர்
9. ராணிசம்யுக்தை
10. அகல்யா பாய்
11. ஸ்வாமி விவேகாநந்தர்
12. தாதா பாய்நவ் ரோஜி
13. மகான் கோவிந்த ராநடே
14. பச்சையப்ப முதலியார்
15. ஆறுமுக நாவலர்

இத்தகையபல பெரியார்சரிதை

கதைகள் எழுதும்பொழுதும், சிறுவியாசங்களை எழுதும் பொழுதும் அடியிற்கண்ட பழமொழிகளை உபயோகப்படுத்திப் பழக்கவேண்டும்.

1. அல்பசகவாசம் பிராண சங்கடம்
2. அண்ணன் பிள்ளையை நம்புவதைவிட தென்னம் பிள்ளையை நம்பலாம்
3. அடிஉதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவமாட்டான்
4. அப்பியாச வித்தைக்கு அழிவில்லை.
5. ஆபத்திலே அறியலாம் அருமை சிநேகிதனை

6. ஆவும் தென்னையும் ஐந்து வருஷத்தில் பலன் கொடுக்கும்

7. ஆலும் வேலும் பல்லுக்குறுதி

8. ஆலம் விழுது தாங்குகிறாற்போல

9. ஆனைப்பசிக்குச் சோளப்பொரி தாங்குமா?

10, ஆனைவிழுந்தால் கொம்பு, புலிவிழுந்தால் தோல்

11, இளமையிற் கல்வி எப்போதும் நிற்கும்

12, ஈயைப்போல் சுத்தமும் எறும்பைப்போல் பலமும்

13. உற்ற சிநேகிதன் உயிருக்கு அமிர்தம்

14. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு எளிது

15. எறும்புக்குக் கொட்டாங்கச்சித் தண்ணீர் ஸமுத்ரம்

16. ஏர்பிடித்தவன் என்ன செய்வான், பானைபிடித்தவள் பாக்யவதி

17. ஐயர் வருமட்டும் அமாவாசை காத்திருக்குமா?

18. ஒருவர் பொறை இருவர் நட்பு

19 ஓடம் வண்டியிலேறுவதுண்டு; வண்டி ஓடத்திலேறுவதுண்டு.

20. வௌவால் வீட்டுக்கு வௌவால் வந்தால் "நீ ஒரு கொம்பிலே, நான் ஒரு கொம்பிலே"

148878
600 008.

Printed by :
THE KANDAN PRESS,
32 Broadway, Madras.

51

இன்னிசை மஞ்சரி.

13 MAR 1930

By

V. ராஜகோபாலய்யர்.

D. மாணிக்கம் பிள்ளை,
மன்னார்குடி.

காப்பி ரைட்] 1929 [விலை அணா 4